**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

# OS. No.201/2023

**27.03.2026**

**P.W.1- அலெக்ஸ்பாண்டி**

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு 3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

வழக்கில் நான் தாக்கல் செய்த ஆவணங்கள் போலியானவை மற்றும் உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. நான் வழக்கறிஞூர் தொழில் செய்துவருகிறேன். எனது வழக்கறிஞூர் உரிமம் எண்.430-2016 ஆகும். பத்திரம் பதிவு செய்யும் தொழில் உள்ளது என்றால் சரிதான். விஜயலட்சுமிக்கு தாவா சொத்து பூர்வீக சொத்து இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை எனது மாமியார் பெயரில் கிரையம் பெற்றேன் என்றால் எனது மாமியார் தான் கிரையம் பெற்றார். எனது மாமியாருக்கு கிரையமாக கொடுக்கவில்லை, அடமானமாகத் தான் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் தாவா சொத்தில் ஆடு, மாடு மேய்த்து வருகிறார்கள் என்றால் சரிதான். வா.சா.2 நான் அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்தார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதிக்கும், வா.சா.2க்கும் சிவில் வழக்கு நடக்கிறது என்றால் சரிதான். அந்த முன்விரோதம் காரணமாக வா.சா.2 இந்த வழக்கில் சாட்சியம் அளித்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 1, 2, 3 பிரதிவாதிகள் தகர செட்டு போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தின் நான்கு மால் வடக்கே ராஜேந்திரன் மற்றும் பாண்டியம்மாள் ஆகியோர் நிலமும், பொது மந்தையும், ஒத்தையடி பாதையும், தெற்கே ராஜேந்திரன் மனைவி கனி நிலமும், கிழக்கே அருள்மிகு வடக்குவாசல் செல்லியம்மன் கோவில் நிலமும், காசி மகன் பிரவீன் நிலமும், மேற்கே ராஜேந்திரன் மற்றும் பாண்டியம்மாள் நிலமும் உள்ளது. தாவா சொத்து விஜயலட்சுமிக்கு அரசால் ஒப்படைக்கப்பட்டது என்றால் தெரியாது. மேற்படி நிலத்தை 30 ஆண்டுகள் விற்கவோ, வாங்கவோ முடியாது

என்றால் தெரியாது. தாவா சொத்திற்கு வட்டாட்சியர் பட்டா கொடுத்துள்ளார். பிரதிவாதிகள் 25 வருடங்களாக தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் 2020ல் ஆக்கிரமிப்பு செய்தார்கள். விஜயலட்சுமிக்கு வாரிசு இல்லையென்பதால் விஜயலட்சுமியிடம் தாவா சொத்தை மோசடியாக கிரையம் பெற்றோம் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சுருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.27 17:44:53 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.